### தமிழ் நிலப்பரப்பின் தொன்மையை

# உலகுக்கு எடுத்துரைக்கும் தொல்லியல் ஆய்வுகள் தொடர வேண்டும்!

## முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு வலியுறுத்தல்!


தென்காசி, ஜூலை 16-

தென்காசி மாவட்டம், மலையடிப்பட்டியில் நடைபெற்று வரும் முக்கிய தொல்லியல் அகழாய்வுப் பணிகளை முன்னாள் தொல்லியல்துறை அமைச்சரும், திருச்சுழி சட்டமன்ற உறுப்பினருமான தங்கம் தென்னரசு நேற்று நேரில் பார்வையிட்டார். இந்த ஆய்வின்போது, அகழாய்வுத் தளத்தில் கண்டெடுக்கப்பட்ட பல்வேறு தொல்பொருட்கள் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் குறித்து தொல்லியல் ஆய்வாளர்களிடம் விரிவாகக் கேட்டறிந்த அவர், சுமார் ஈராயிரம் ஆண்டுகள் பழமையான சங்ககாலத்தைச் சேர்ந்த செங்கற்களால் கட்டப்பட்ட படிக்கட்டுடன் கூடிய கிணற்றையும் பார்வையிட்டார்.

முன்னதாக தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அறிவிக்கப்பட்டு, கடந்த மூன்று மாதங்களாக தமிழ்நாடு தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த அகழாய்வில், வாழ்விடப் பகுதி மற்றும் ஈமப் பகுதி ஆகிய இரண்டு முக்கியப் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த அகழாய்வில், கீழடி உள்ளிட்ட சங்ககாலத் தளங்களுக்கு ஒப்பான செங்கல் கட்டுமான சுவடுகள், கண்ணாடி மணிகள், கருப்புசிவப்பு நிறப் பானை ஓடுகள், காதணிகள், விளையாட்டுக் காய்கள் உள்ளிட்ட ஏராளமான தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும், நுண்கற்காலம் முதல் வரலாற்றுக் காலம் வரை தொடர்ச்சியான மனித வாழ்விடத்திற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பது இந்த அகழாய்வின் சிறப்பம்சமாகும்.

இந்நிலையில், இது குறித்து எக்ஸ் சமூக வலைத் தளத்தில் பதிவிட்டுள்ள தங்கம் முன்னாள் அமைச்சர்



தங்கம் தென்னரசு, தென்காசி மாவட்டம், மலையடிப்பட்டியில் திமுக ஆட்சியில் தொடங்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வரும் தொல்லியல் அகழாய்வுப் பணிகளை நேற்று நேரில் பார்வையிட்டு, அங்கு கண்டறியப்பட்டுள்ள தொல்பொருட்கள் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் குறித்து தொல்லியல் ஆய்வாளர்களிடம் கேட்டறிந்தார்.

மக்கள் வாழிவிடப் பகுதியில் அமைந்திருந்த ஈராயிரம் ஆண்டுகள் பழமையான செங்கல் படிக்கட்டுக் கிணறு, கீழடியின் கண்டுபிடிப்புகளுக்கு ஒத்த கட்டுமானச் சுவடுகள், கருப்புசிவப்பு பானை ஓடுகள், கண்ணாடி மணிகள் உள்ளிட்ட பல்வேறு தொல்பொருட்களின் கண்டுபிடிப்பு, இப்பகுதியின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பையும் வெளிப்படுத்துகிறது.

வரலாற்றில் பல்வேறு காலங்களில் மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகளைக் கொண்டுள்ள தென்காசி மாவட்டம் மலையடிப்பட்டி அகழாய்வு, கீழடி மற்றும் ஆதிச்சநல்லூரைப் போல தமிழ்நாட்டின் தொன்மையான வரலாற்றுக்கு புதிய வெளிச்சம் பாய்ச்சும் முக்கியத்துவம் வாய்ந்த அகழாய்வாக அமையும் என்ற நம்பிக்கை உள்ளது.

தமிழ் நிலப்பரப்பின் தொன்மையையும், தமிழர் நாகரிகத்தின் வரலாற்றையும் அறிவியல் சான்றுகளுடன் உலகிற்கு எடுத்துரைக்கும் இதுபோன்ற தொல்லியல் ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

# நாகர்கோவிலில் மாற்றுத்திறனாளி இளைஞர் மர்ம மரணம்!

## காவல் மரணமா? கடும் நடவடிக்கை தேவை! கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!



சென்னை, ஜூலை 16-

மாற்றுத்திறனாளி சபரிவர்மன் மரணம் குறித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. ட்விட்டர் பதிவு வருமாறு:-

நாகர்கோவிலில் மாற்றுத்திறனாளி இளைஞர் சபரிவர்மன் என்பவரைக் கைது செய்து நீதிமன்றக் காவலில் வைத்திருந்த நிலையில், நேற்றைய தினம் அவர் உயிரிழந்த செய்தி அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது.

காவல்துறையினரின் வன்முறைக்கு உள்ளாகி, உடல்நலம் பாதிக்கப்பட்டு தான் அந்த இளைஞர் உயிரிழந்திருப்பதாக அவரது உறவினர்கள் கூறுவது, இது காவல் மரணமா என்ற சந்தேகத்தை எழுப்புகிறது.

இம்மரணத்திற்குப் பொறுப்பேற்று, இதில் தொடர்புடைய காவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமா த.வெ.க. அரசு?

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்துள்ளார்.

### விஜயின் குதிரை பேர அரசியலுக்கு எதிராக –

# ஆளுநர் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் நீதிமன்றத்தை நாடுவோம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, ஜூலை 16-

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தனது பேட்டியில் குறிப்பிட்டதாவது :-

கரூரில் முதல்வர் விஜய் பேசியது தொடர்பாக உச்ச நீதிமன்ற வழிகாட்டல் படி ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதி தலைமையிலான விசாரணைக் குழுவிடமும், CBI யிடமும் திமுக சார்பில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் முதல்வர் விஜய் குதிரைபேர ஊழல் ஈடுபட்டு உள்ளார் என்பதை வைகோ அளித்த வாக்குமூலம் அடிப்படையில் ஏற்கனவே கடந்த 4 ஆம் தேதி ஆளுநரை சந்தித்து ஆதாரத்தோடு புகார் அளித்தோம். அதேபோல விஜய பாஸ்கர் அவர்களும் வெளிப்படையாகவே செய்



தியாளர் கூட்டத்திலே என்னை தவேக வில் வந்து சேரும்படி கேட்டுக்கொண்டார்கள் ஆகவேதான் நான் ராஜினாமா செய்கிறேன் என்று சொல்லி எம். எல். ஏ பதவியை ராஜினாமா செய்துவிட்டு அவரும் சேர்ந்து விட்டார். ஆக இதெல்லாம் குதிரைபேர ஊழலுக்கு தகுந்த ஆதாரங்கள் என்பதை சுட்டிக்காட்டி ஆளுநரிடத்தில் இன்று மீண்டும் ஒருமுறை திமுகவின் சார்பில் புகார் கொடுத்திருக்கிறோம்.

விஜய் பேசும் போது கொத்து பரோட்ட என்றெல்லாம் கொச்சையாக பேசுகிறார். கரூர் விஜய பாஸ்கர், விராலிமலை விஜயபஸ்கர் ஆகிய இருவருமே நாங்கள் சாப்பிட்டுப் போட்ட இரண்டு இலை தான் அதை தவெக வில் இணைத்துக் கொண்டுள்ளனர் என அதிமுகவினரே விமர்சித்து உள்ளனர். ஆகவே எச்சில் இலையை வைத்து ஒரு விழா நடத்துகிறார். அதில் ஏற்கனவே வெளியிட்ட கரூர் அறநிலையத்துறை நிலம் தொடர்பான அரசாணையை ஏதோ இவரிடம் கோரிக்கை வைத்து அதன் பிறகு வெளியிடுவது போல ஒரு நாடகத்தை நடத்தி காட்டியுள்ளார். இந்த நாடகம் நடந்தது 10ஆம் தேதி ஆனா 9 ஆம் தேதியே அதற்கான அரசாணை போடப்பட்டுவிட்டது. இது எவ்வளவு பெரிய பித்தலாட்டம் எவ்வளவு பெரிய நாடகம். ஆக இப்படிப்பட்ட நாடகங்களை இவர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் முடிவுகட்டுகிற வகையில் திமுக நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்து கொள்கிறேன். குதிரை பேர புகாரின் பேரில் ஆளுநர் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் நீதிமன்றத்தை நாடுவோம்.

இவ்வாறு ஆர்.எஸ்.பாரதி அவர்கள் தெரிவித்துள்ளார்..

# சி.பி.எஸ்.இ. - 9, 10ஆம் வகுப்புகளில் மூன்றாம் மொழி தேர்ச்சி கட்டாயம்!

டெல்லி.ஜூலை 16-

சிபிஎஸ்இ 9, 10ஆம் வகுப்புகளில் தேர்ச்சி பெற மூன்றாம் மொழியின் உள் மதிப்பீட்டுத் தேர்வில் தேர்ச்சி கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 2027-28 கல்வி யாண்டு முதல் 10ஆம் வகுப்பு செல்பவர்கள் பொதுத்தேர்வில் மூன்றாம் மொழித் தேர்வு எழுத தேவையில்லை.

நாடு முழுவதும் சிபிஎஸ்இ பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு, 3வது மொழிப் பாடத்தை

எடுத்துப் படித்தாலும் இந்த ஆண்டு பொதுத் தேர்வு நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆர்3 என்று கூறப்படும் 3வது மொழிப் பாடத்துக்கு, பள்ளிகள் நடத்தும் உள்நிலைத் தேர்வுகள் மூலமாக மட்டுமே மேற்கொள்ளப்படும் என்று சிபிஎஸ்இ அறிவித்துள்ளது.

மூன்றாவது மொழிப் பாடத்திட்டத்துக்கான தேர்வுகள், பள்ளி அளவிலான உள் மதிப்பீட்டு முறையில் மட்டுமே பதிவு செய்யப்படும். 3வது மொழிப்பாடத்தில் தேர்ச்சி பெறாத மாணவர்களும் 10ம் வகுப்புக்கு முன்னேற்றம் செய்யப்படுவார்கள்.

ஆனால், அதே மாணவர்கள் 10ஆம் வகுப்பு படிக்கும்போது மூன்றாவது மொழிப் பாடத்திலும் தேர்ச்சி பெற வேண்டியது அவசியமாகும்.

மேலும் சிறப்புக் குழந்தைகள், மாற்றுத்திறனாளிகளுக்கு 3வது மொழிப் பாடத்தைக் கற்பதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. வெளிநாடுகளில் படிக்கும் மாணவர்கள் இந்திய மொழி ஒன்றை 3வது மொழியாக எடுத்துப் படிப்பதில் விலக்கு அளிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும் 10-ஆம் வகுப்பு மாணவர்களைப் பொறுத்த வரை, சிபிஎஸ்இயின் தேர்ச்சி பெற்றோர் என்ற சான்றிதழ் பெறுவதற்கு, தேர்வில் தேர்ச்சி பெறுவது கட்டாயம். 10-ஆம் வகுப்பில் 3வது மொழித் தேர்வில் தோல்வியடையும் மாணவர்களுக்கு, தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாக மறுமதிப்பீட்டிற்கான (re-assessment) வாய்ப்பு வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

### சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில்

# த.வெ.க. அரசு முழுமையாகத் தோல்வி!

## தி.மு.க. ஐ.டி. விங் கண்டனம்!

சென்னை, ஜூலை 16-

தி.மு.க. ஐ.டி. விங்கின் வலைதளப்பதிவு வருமாறு:-

செங்கல்பட்டு ஆத்தூர் அரசினர் பாதுகாப்பு மையத்தில் இருந்து 12 சிறார்கள் காவலர்களை தாக்கி கதவை உடைத்துத் தப்பி ஓடியதும், வெளியே வந்து அப்பாவி பொதுமக்களைத் தாக்கி பைக், செல்போன் மற்றும் பணத்தைக் கொள்ளையடித்ததும் த.வெ.க. அரசின் நிர்வாகச் சீர்கேட்டின் உச்சம்.

பாதுகாப்பு இல்லத்தில் இருக்க வேண்டியவர்கள், இன்று பொதுமக்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழலை உருவாக்கியிருப்பது அரசின் மெத்தனப்போக்கையே காட்டுகிறது.

கடந்த வாரம் இதே சீர்திருத்தப் பள்ளியில் மோதல் நடந்தும், நிர்வாகம் எந்தப் பாடமும் கற்காமல், இன்று 12 பேர் தப்பிக்கும் அளவுக்குப் பாதுகாப்பைத் தளர்வாக வைத்திருந்தது ஏன்?

இவ்வளவு அராஜகங்கள் நடந்தும், வெறும் வேடிக்கை பார்க்கும் த.வெ.க. அரசு, சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதில் முழுமையாகத் தோல்வியடைந்துவிட்டது. இந்த அவல நிலை தொடர்ந்தால், தமிழகம் கிரிமினல்களின் கூடாரமாக மாறிவிடும்!

ரீல்ஸ் வேண்டாம்! நீதி வேண்டும்!

இவ்வாறு அப்பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



Chennai

12 inmates escape from Govt. Place of Safety, one arrested

DT NEXT

12 fleeing from govt home rob bikes, phone; one held

A week ago, two groups had clashed in the same government home and cases were registered against 19 youths

THE INDIAN EXPRESS CHENNAI

12 inmates escape from juvenile home, 1 caught

TIMES CITY

Movie time chaos: 12 boys flee govt juvenile home

Minors Stole 3 Bikes After Escaping

### த.வெ.க. ஆட்சியில் – நெல்லை ராதாபுரம்

# சார்பதிவாளர் அலுவலகம் நள்ளிரவில் திறப்பு!

## பொதுமக்கள் அதிர்ச்சி

நெல்லை, ஜூலை 16-

நெல்லை மாவட்டம் ராதாபுரத்தில் செயல்பட்டு வரும் சார்பதிவாளர் அலுவலகத்தில் தினந்தோறும் ஏராளமான பத்திரப்பதிவு நடைபெற்று வருகிறது. இங்கு பணிபுரியும் ஊழியர்கள் சிலர் போலி ஆவணங்கள் மூலம் சொத்துக்களைப் பதிவு செய்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக, கடந்த ஏப்ரல் மாதம் மாவட்ட காவல் துறை குற்றப்பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் தற்போது நள்ளிரவு நேரங்களிலும் பத்திரப் பதிவு அலுவலகம் திறந்து சில நில புரோக்கர்கள் உள்ளே சென்று வருவதாகவும் லஞ்ச பணம் பெருமளவு பங்கு பிரிப்பதாகவும் கூறப்படுகிறது. இதனால், ஆள் மாறாட்டம் மற்றும் போலி ஆவணங்கள் மூலமாக நிலங்களைப் பறிமுதல் செய்யும் சட்டவிரோதப் பதிவுகள் அதிகமாக நடக்க வாய்ப்புள்ளதாக நில உரிமையாளர்களும் பொதுமக்களும் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்த விவகாரம் தொடர்பாக பதிவுத்துறை உயர் அதிகாரிகளும், காவல்துறையும் உரிய விசாரணை நடத்தவேண்டும் என்று பல்வேறு தரப்பினர் வலியுறுத்தியுள்ளனர்.



நாகர்கோவில் மாநகராட்சியின் குப்பை கொட்டும் இடமான வல்லங்குமாரவிளை குப்பை கிடங்கில் திடீரென தீப்பற்றியது மூன்று தீயணைப்பு நிலையங்களில் இருந்து வண்டிகள் வந்து தீயை அனைத்தனர். இந்தநிலையில் சம்பவ இடத்துக்கு வந்த நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின் தீயணைப்பு துறை அதிகாரிகள் மற்றும் காவல்துறையிடம் விபரங்கள் கேட்டறிந்து தீயை விரைந்து அணைக்க கோரிக்கை வைத்தார் உடன் மாநகராட்சி மேயர் மேரி பிரின்ஸி லதா, மண்டலத் தலைவர் அகஸ்டினா கோகில வாணி மாநகராட்சி தலைமை பொறியாளர் ரகுராமன் மாநகர திமுக செயலாளர் ஆனந்த் ஆகியோர் உட்பட பலர் உள்ளனர்.



தென்காசி மாவட்டம் கல்லூரணி ஊராட்சி மன்றம் சார்பில் கல்லூரணியில் ஊராட்சி மன்றம் மற்றும் அகர்வால் கண் மருத்துவமனை இணைந்து மாபெரும் இலவச கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. இந்த முகாமை தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு. கலை கதிரவன் துவக்கி வைத்தார். இதில் முன்னாள் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் . சிவபத்மநாதன், ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார், தொழிலதிபர் சேவியர் ராஜன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சாக்ரடீஸ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் முத்துக்குமார், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் எல்லாம் குமார் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர். இந்த முகாம் மூலம் 100 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கண் பரிசோதனை மேற்கொண்டு பயனடைந்துள்ளனர்.